மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.03/2022
உள்
அசல் வழக்கு எண்.26/2019

-------------

ரா.அழகர்சாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ரா.சீத்தாலட்சுமி
2. ரா.சீனிவாசன்
3. கி.கிருஉஷ்ணவேணி
4. ரா.ஜெயலெட்சுமி
5. டி.கருப்பசாமி
6. எஸ்.என்.பாஸ்கரன் (இறப்பு)
7. எஸ்.என்.ரமேஉஷ்பாபு
8. சார்பதிவாளார்
   சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9. பா.ரமாதேவி
10. பா.சினேகா
11. பா.அபிஷேக் ... எதிர்மனுதாரர்கள்/
    உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனு 25.07.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 05.12.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 11ம் உத்தேச எதிர்மனுதாரர்/11ம் உத்தேச பிரதிவாதி, 9, 10 உத்தேச எதிர்மனுதாரர்கள்/9, 10 உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜே.சுரேஉஷ் தேவ ஜஸ்டின் அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5, 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு

எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை *22* விதி *9*-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா வழக்கில் இறந்துபோன *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த *90* நாட்களுக்குள் அவரது வாரிசுகளான *9* முதல் *11* உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்காததால் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி *18.07.2022*ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**</u>

தாவா வழக்கானது மனுதாரர் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் இருந்த போது *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் கடந்த *31.05.2021*ம் தேதியன்று *9* முதல் *11* உத்தேச பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த தேதியிலிருந்து அடுத்த *90* நாட்களுக்குள் வாரிசுகளான *9* முதல் *11* உத்தேச பிரதிவாதிகளை தாவா வழக்கை சேர்க்கக்கோரி மனு செய்திருக்க வேண்டும். ஆனால் *7*ம் பிரதிவாதியான எஸ்.என்.ரமேஷ்பாபு மற்றும் அவரது வழக்கறிஞர் *6*ம் பிரதிவாதி இறந்த சங்கதியினை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்தவிரபம் தற்போது தான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. எனவே, *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த தேதியிலிருந்து அடுத்த *90* நாட்களுக்குள் மனு செய்திருக்க வேண்டும். ஆனால் *7*ம் பிரதிவாதியான எஸ்.என்.ரமேஷ்பாபு மற்றும் அவரது வழக்கறிஞர் *6*ம் பிரதிவாதி இறந்த சங்கதியினை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. *6*ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்தவிரபம் தற்போது தான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. எனவே, *6*ம் பிரதிவாதியான இறந்துபோன எஸ்.என்.பாஸ்கரனின் வாரிசுகளான *9* முதல் *11* உத்தேச பிரதிவாதிகளை

சேர்க்காத காரணத்தினால் தாவா அசல் வழக்கில் அபேட்மெண்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாய் ஏற்பட்டதாகும். எனவே, 6ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த 90 நாட்களுக்குள் அவரது வாரிசுகளான 9 முதல் 11 உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்காததால் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்து செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்கள் தரப்பிற்கு ஏராளமான கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படுவதாய் உள்ளது. எனவே, தாவா வழக்கில் இறந்துபோன 6ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த 90 நாட்களுக்குள் அவரது வாரிசுகளான 9 முதல் 11 உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்காததால் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). (8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.04/2022 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இ.ம.எண்.03/2022 மனுவில் ஏற்றுக்கொள்ளுமாறு மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது) 8ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.03/2022 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுவில் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தனது மனுவில் உண்மைக்கு புறம்பான காரணங்களைக் கூறி மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் மனுவானது 8ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். அசல் வழக்கானது விசாரணை நிலையில் உள்ளது. இந்த நிலையில் 6ம் பிரதிவாதி 31.05.2021ம் தேதியில் இறந்ததாக கூறியும், அதனை 7ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்க தெரிவிக்கவில்லை என்று கூறுகிறார். வழக்கு தாக்கல் செய்த வாதியானவர் வழக்கு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் 7ம் பிரதிவாதியானவர் 6ம் பிரதிவாதியின் இறப்பு குறித்து தெரிவிக்கவில்லை என்று கூறுவது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. மனுதாரர் மனு தாக்கலில் ஏற்பட்ட 262 நாட்கள் காலதாமதத்திற்கான சரியான காரணங்கள் ஏதும்

தெரிவிக்கவில்லை. மேலும், காலதாமதத்திற்கான போதுமான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது 8ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**4). (9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.04/2022 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இ.ம.எண்.03/2022 மனுவில் ஏற்றுக்கொள்ளுமாறு மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது) 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.04/2022 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-**

மனுவில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. இந்த வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருந்தபோது 6ம் பிரதிவாதி எஸ்.என்.பாஸ்கரன் கடந்த 31.05.2010ல் இறந்து, அதற்காக 22.07.2021 தேதி மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வாதி மனுவில் 7ம் பிரதிவாதியோ, அவரது வழக்கறிஞரோ 6ம் பிரதிவாதியின் இறப்பு பற்றி சொல்லவில்லை என்று தனது தவறை மறைப்பதற்காக சொல்லியுள்ளார். இந்த வழக்கில் 7ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த மனுவில் தாக்கல் செய்வதில் 263 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நீதிமன்றத்தை குழப்பும் விதமாக 262 நாட்கள் காலதாமதம் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**8). தீர்வு:-**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா வழக்கில் இறந்துபோன 6ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த 90 நாட்களுக்குள் அவரது வாரிசுகளான 9 முதல் 11 உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்காததால் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 18.07.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக் கூடும். மேலும், இந்த வழக்கு சம்மந்தமாக வேறு வழக்குகளும் எழுக்கூடும். அதனால் காலவிரையம் மற்றும் இதர விரையங்களும் எழக்கூடும். மேலும் இறந்துபோன 6ம் பிரதிவாதிக்காக 9 முதல் 11 உத்தேச பிரதிவாதிகள் உள்ளதால் அவர்களை விட்டுவிட்டு இந்த வழக்கை நடத்தும்பட்சத்தில் இந்த வழக்கில் சரியான தீர்வு எட்டமுடியாமல் போய்விடக்கூடும். மேலும் இவ்வழக்கில் இ.ம.எண்.04/2022 மனுவும் செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், இ.ம.எண்.04/2022 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுதாரரால் தாவா வழக்கில் இறந்துபோன 6ம் பிரதிவாதியான எஸ்.என்.பாஸ்கரன் இறந்த 90 நாட்களுக்குள் அவரது வாரிசுகளான 9 முதல் 11 உத்தேச பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்காததால் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்து செய்து

உத்தரவிடக்கோரி 18.07.2022ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.